# 9

# ஜனாஸாவின் கடமைகளை நிறைவேற்றுவோம்



காஸிம் ஹாஜியாரின் ஜனாஸா வீட்டிலிருந்து வெளியே கொண்டுவரப்படுகிறது. திரண்டிருந்த கூட்டத்தின் நடுவே குமார் காணப்படுகிறார். அவர் காஸிம் ஹாஜியாரின் அயல்வீட்டுக்காரர் மட்டுமல்ல; நெருங்கிப் பழகியவரும் கூட. ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டு மக்கள் மையவாடியிலிருந்து வெளியேறும் வரை அனைத்து விடயங்களையும் கவலையோடு அவதானித்துக் கொண்டிருந்தார்.

பின்னர், திரும்பி வந்துகொண்டிருக்கும்போது காஸிம் ஹாஜியாரின் மற்றொரு நண்பரான நிஸாம் ஆசிரியரை சந்திக்கிறார். இருவரும் கதைத்துக் கொண்டே நடந்தனர். காஸிம் ஹாஜியாரின் குணநலங்கள் பற்றி ஆரம்பித்த பேச்சு, முஸ்லிம் ஜனாஸா பற்றிய உரையாடலாக மாறியது.

- நீங்கள் ஜனாஸாவை அவசரமாக அடக்கம் செய்வது பற்றி தெரிந்து கொள்ளலாமா? என்று குமார் கேட்டார்.

இஸ்லாம் அவசரமாக நிறைவேற்ற வேண்டிய சில விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளது. அதிலொன்று, ஒருவர் மரணித்தால் அவரை அவசரமாக அடக்கிவிட வேண்டும் என்பதாகும். மரணித்தவர் நல்லவராக இருந்தால் அவர் செல்லுமிடம் சிறந்தது. இந்நிலையில் அவரை தாமதப்படுத்துவது நல்லதல்ல. மேலும், மரணித்தவரை வீட்டில் தொடர்ந்து வைத்திருப்பது வீட்டாருக்கும் உறவினருக்கும் கவலையை நீடித்துக் கொண்டிருக்கும். அவசரமாக அடக்கம் செய்வதால் அந்த நிலை இல்லாமல் போய்விடும்.

மரணித்தவரின் உடலை மற்றவர்கள் பார்ப்பது தொடர்பாக நீங்கள் வரையறைகளை வைத்துள்ளீர்கள் அல்லவா?

ஆம், எம்மிடையே சில வரையறைகள் உள்ளன. ஆண் மையித்தை ஆண்களும், பெண் மையித்தைப் பெண்களும் பார்வையிடலாம். அத்துடன் 'மஹ்ரமிகளும்' (திருமண முடிக்க அனுமதிக்கப்படாதோர்) பார்வையிடலாம்.

- நீங்கள் நடத்தும் இறுதிக் கிரியை பற்றியும் தெரிந்துகொள்ளலாமா?

முஸ்லிம் ஒருவர் மரணித்தால் அவருக்காக நான்கு கடமைகளை நிறைவேற்றுவது மற்ற முஸ்லிம்களின் கடமையாகும்.

**I குளிப்பாட்டுதல்**

**II கபனிடுதல்**

**III தொழுவித்தல்**

**IV அடக்கம் செய்தல்**



இக்கடமைகளை நிறைவேற்றாது போனால் முழுச் சமூகமும் குற்றவாளியாகக் கணிக்கப்படும். இவ்வாறான கடமைகள் 'பர்ளுகிபாயா' எனப்படுகின்றன.

- ஒருவர் மரணித்ததும் நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஒருவர் மரணித்ததாக உறுதியானால் கண் இமைகளை மூடிவிடுவோம். வாயை மூடி நாடியைத் தலையுடன் சேர்த்து சீலைப் பட்டியால் கட்டிவிடுவோம். கால் பெருவிரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டிவிடுவோம். மூட்டுக்களை மடித்து நிமிர்த்துவோம். நெஞ்சு முதல் அடிவயிறு வரை மெதுவாக அழுத்தி வயிற்றிலுள்ள அசுத்தங்களை வெளியேற்றி விடுவோம். பின்னர் படுக்க வைத்து ஒரு சீலையால் மூடிவிடுவோம்.

- பிறகு என்ன செய்வீர்கள்?

மையித்தை அடக்கம் செய்யுமுன் குளிப்பாட்ட ஆரம்பிப்போம். மரணித்தவரின் அவ்ரத், குறைகள் மற்றும் அந்தரங்க விடயங்களை வெளிப்படுத்தாத நம்பிக்கைக் குரிய உறவினரே இதனை நிறைவேற்றுவர். இயலாதபோது அனுபவசாலிகளை இணைத்துக் கொள்வர். குளிர்நீர், சுடுநீர், உவர்நீர் என்பவற்றில் பொருத்தமான ஒன்றைப் பயன்படுத்துவோம். இலந்தை இலையையும், சவர்க்காரத்தையும் சேர்த்துக் கொள்வோம். கர்ப்பூரத்தையும் கலந்துகொள்வோம். நீராட்டு முன் அசுத்தங்கள் (நஜீஸ்) ஏதுமிருப்பின் அவற்றை அகற்றிவிடுவோம். முதலில் வுழூச் செய்வித்து பின்னர் நீராட்டுவோம். நீராட்டி முடிந்ததும் மென்மையான துணியால் துடைத்து கர்ப்பூரம் தடவிய பஞ்சை கண், காது, மூக்கு முதலான துவாரங்கள் உள்ள இடங்களில் வைப்போம்.

- குளிப்பாட்டிய பின்னர், என்ன செய்வீர்கள்?

மையித்தை கபனிடுவோம்.

- கபன் என்றால்?

மையித்திற்கு அணிவிக்கும் வெள்ளை உடை கபன் எனப்படுகிறது. இது சுத்தமான பழைய புடைவையாகவும் இருக்கலாம். எனினும் புதிய புடைவையையே பயன்படுத்துகின்றோம். ஏனைய உடைகள் போல இது தைத்து அணிவிக்கப்படுவதில்லை. ஆண்களாயின் மூன்று துணிகளாலும், பெண்களாயின் ஐந்து துணிகளாலும் மையித்தைப் போர்த்துவோம். அவ்ரத் வெளிப்படாத நிலையில் சில இடங்களில் எளிமையாக நூலோடிடுவோம். அதற்குப் பொருத்தமாக நேர்த்தியான முறையில் துணியை வெட்டிக் கொடுப்போம். இறுதியாகக் கபனில் வாசனையைத் தெளித்து விடுவோம். கபனிடப்பட்ட பின் தலைக்கு மேல் ஒரு கட்டும், காலுக்குக் கீழ் ஒரு கட்டும், இடுப்பில் மற்றொரு கட்டும் போடுவோம். பின்னர் அடக்கத்துக்காக சந்தூக்கில் வைத்துத் தோளில் சுமந்து செல்வோம். அரிதான சந்தர்ப்பங்களில் மாத்திரம் வாகனத்தில் கொண்டு செல்வோம்.

- தொழுகை எப்போது நடக்கும்?

குளிப்பாட்டிக் கபனிட்ட பின்னர் தொழுகையை நடத்துவோம். மையித்துக்கான தொழுகை, ஏனைய தொழுகைகளிலிருந்து சற்று வித்தியாசமானது. நின்ற நிலையிலேயே அது நிறைவேற்றப்படுகின்றது. மையித் வைக்கப்பட்ட சந்தூக்கு கிடையாக வைக்கப்படும். இமாமாக நிற்பவர் ஆண் மையித்தாயின் முகத்துக்கு நேராகவும் பெண் மையித்தாயின் அதன் நடுப்பகுதிக்கு நேராகவும் நிற்பார். அவருக்குப் பின்னால் நாங்கள் அணியணியாக நின்று இமாமைப் பின்பற்றித் தொழுவோம்.

‘இந்த மையித்தின் மீது விதியான நான்கு தக்பீர்களையும் அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன்’ என்ற நிய்யத்தோடு தொழுகையை ஆரம்பிப்போம். தொழுகையை நடத்துபவர் ‘அல்லாஹு அக்பர்’ என்று ஒலி எழுப்பியதும் நாமும் தக்பீர் கட்டி

ஸூறதுல் பாத்திஹாவை ஓதுவோம்.

இரண்டாவது தக்பீருக்குப் பின் நபி ஸ அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வோம். தொழுகையின் அத்தஹிய்யாத்தில் இடம்பெறுகின்ற ஸலவாத் இப்றாஹீமிய்யாவை ஓதுவது நல்லது. மூன்றாவது தக்பீருக்குப் பின் மையித்துக்காகப் பிரார்த்தனை செய்வோம். அதன்போது அல்லாஹ் அவருடைய பாவங்களை மன்னித்து அருள்பாலிப்பானாக என்ற கருத்துடைய பின்வரும் துஆவை ஓதுவோம்.

ஆண் மையித்தாயின்

اَللّٰهُمَّ اغْفِرْلَهُ وَارْحَمْهُ என்றும்

பெண் மையித்தாயின்

اَللّٰهُمَّ اغْفِرْلَهَا وَارْحَمْهَا என்றும் ஓதுவோம்.

இதைவிட நீளமான துஆக்களும் உண்டு. அவற்றையும் ஓதலாம்.

நான்காவது தக்பீருக்குப் பின் ஸலாம் கூறித் தொழுகையை முடிப்போம். ஸலாத்துக்கு முன்

ஆண் மையித்தாயின்

اَللّٰهُمَّ لاَ تَحْرِمْنَا أَجْرَهُ وَلاَ تَفْتِنَّا بَعْدَهُ وَاغْفِرْلَنَا وَلَهُ

என்றும்

பெண் மையித்தாயின்

اَللّٰهُمَّ لاَ تَحْرِمْنَا أَجْرَهَا وَلاَ تَفْتِنَّا بَعْدَهَا وَاغْفِرْلَنَا وَلَهَا

என்றும் பிரார்த்தனை செய்வோம். தொழுகை முடிந்ததும் அடக்குவதற்குத் தயாராகுவோம்.

- நீங்கள் மையித்தைக் கப்றில் வைப்பதற்காக எதையும் பயன் படுத்துவதில்லையா?

நாங்கள் வெறுந் தரையில் தான் மையித்தை வைப்போம். இதற்காகத் தனியான அமைப்பில் கப்ரைத் தோண்டுவோம். மையித்தின் உயரத்துக்கேற்ற நீளமும், சுமார் 75 சென்றி மீற்றர் அகலமும் கொண்டதாக கப்ர் இருக்கும்.



அதில் உட்குழி, வெளிக்குழி என இரண்டு குழிகள் இருக்கும். மையித்தைக் கிப்லாவை முன்னோக்கி உட்குழியில் வைப்போம். அதன்போது மையித்தின் வலப் பக்கம் நிலத்தில் பட்டிருக்கும் படியும். முதுகுப்புறம் குழியின் பக்கவாட்டை தொட்டிருக் கும். மையித்தை உட்குழியில் இறக் குவதற்காகப் பட்டியொன்றை அல்லது பலமான சேலையைப் பயன்படுத் துவோம். உட்குழியில் மையித் வைக்கப்பட்ட பின்னர் கபனில் கட்டப்பட்ட மூன்று கட்டுக்களையும் அவிழ்த்து விடுவோம். வலது கன்னத்தைத் திறந்து ஒரு பிடி மண்ணை அணைத்து வைப்போம். உட்குழியைப் பலகையால் மூடுவோம். வெளிக் குழியை மண்ணால் நிரப்புவோம். பின்னர் மையித்துக்காகப் பிரார்த்திப்போம்.

இவ்வாறு கதைத்துக் கொண்டே தனது வீட்டை நெருங்கியதும் குமார் நிஸாம் ஆசிரியருக்கு நன்றி கூறி விட்டு விடை பெற்றுச் சென்றார்.

**பயிற்சி**

1. ஜனாஸா வைபவத்தில் கலந்து கொண்டபோது உங்கள் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளை ஒரு கட்டுரையாக எழுதுங்கள்.

2. செயற்பாடு

   i) ஊரில் நிகழும் ஒரு ஜனாஸா நிகழ்வில் பங்குபற்றிக் குளிப்பாட்டல், கபனிடல், தொழுவித்தல், அடக்கம் செய்தல் தொடர்பான உங்கள் அவதானிப்புகளைத் தொகுத்து எழுதுங்கள்.

   ii) ஜனாஸாத் தொழுகையின் பர்ளுகளைக் கேட்டறிந்து எழுதுங்கள்.



இலவச விநியோகத்திற்காக